**செய்தி வெளியீடு எண்: 988** **நாள்: 9.11.2010**

**இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.**

****

**பொருள்:: தஞ்சாவூர் மாவட்டம், ஒப்பிலியப்பன்கோயில், அருள்மிகு வெங்கடாஜலபதி சுவாமி திருக்கோயில் – திருப்பணிகளுக்கு கர்நாடக மாநில மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். பி.எஸ். எடியூரப்பா அவர்களால் ரூ.1 கோடிக்கு வழங்கப்பட்ட காசோலையினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு ராயா. கோவிந்தராஜன் அவர்களிடம் இன்று (9.11.2010) ஒப்படைத்தது – தொடர்பாக.**

***

தமிழக திருப்பதி என அழைக்கப்படுவதும், ஆழ்வார்களால் பாடல் பெற்ற சிறப்பு மிக்க தலமான தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், ஒப்பிலியப்பன்கோயில், **அருள்மிகு வெங்கடாஜலபதிசுவாமி திருக்கோயிலுக்கு கர்நாடக மாநில மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் பி.எஸ். எடியூரப்பா அவர்கள்** 4.9.2010 அன்று சுவாமி தரிசனம் செய்திட வருகை புரிந்தபோது, இத்திருக்கோயிலின் திருப்பணிகளான தங்கரத ஒடு பாதை மேம்பாட்டு பணிகள், மார்கண்டேய மண்டப பணிகள், பசுமடம், தங்கரத மண்டபம் போன்ற பணிகளுக்காக ரூ.1 கோடி நன்கொடை வழங்குவதாக அறிவித்திருந்தார்.

மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களால் மேற்கண்ட திருப்பணிக்காக வழங்கப்பட்ட ரூ. 1 கோடிக்கான வரைவோலையை இன்று (9.11.2010) **மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் ஒப்பிலியப்பன்கோயில், அருள்மிகு வெங்கடாஜலபதி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு ராயா கோவிந்தராஜன் அவர்களிடம் ஒப்படைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு ப.ரா. சம்பத், இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கூடுதல் ஆணையர் (பொது)**
**ஆணையருக்காக.**

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**